# பதவிக்காக யார் காலிலும் விழுகிற அனுபவம் எனக்குக் கிடையாது:

# கலைஞர் கற்றுக்கொடுத்த திராவிட இயக்கக் கொள்கை, சுயமரியாதை மட்டும்தான் எனக்குத் தெரிந்த அனுபவம்!

## திருவையாறு கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

## எடப்பாடி பழனிசாமியின் வரம்பு மீறிய பேச்சுக்கு சூடு!





தஞ்சை,ஏப்.7–

**தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திருவையாறு சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் துரை.சந்திரசேகரன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``பதவிக்காக யார் காலிலும் விழுகிற அனுபவம் எனக்குக் கிடையாது. எனக்கு இருக்கிற அனுபவம் எல்லாம் சுயமரியாதை அனுபவம்தான். கலைஞர் கற்றுக்கொடுத்த திராவிட இயக்கக் கொள்கை, சுயமரியாதை மட்டும்தான் எனக்குத் தெரிந்த அனுபவம்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, எழுச்சியான, அன்பான வரவேற்பை அளித்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில், தலைவர் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கக்கூடிய வெற்றி வேட்பாளர் அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற செய்து சட்டபேரவைக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் உங்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு வந்தேன். ஆனால், திருவையாறில் நீங்கள் ஏற்கனவே முடிவு செய்து வைத்துவிட்டீர்கள் என்று தெரிகிறது.

### தனிமகிழ்ச்சி, தனிப்பெருமை

ராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம், நேற்று புதுக்கோட்டை மாவட்டம் எல்லாம் முடித்துவிட்டு நேற்று இரவுதான் தஞ்சாவூர் மாவட்டத்துக்குள் நுழைந்தேன். எத்தனை மாவட்டத்துக்குச் சென்றாலும், தஞ்சாவூர் மாவட்டத்துக்குப் வரும்போது எனக்குத் தனிமகிழ்ச்சி, தனிப்பெருமை. ஏன்? இது என் மாவட்டம். இது நம் மாவட்டம்.

தஞ்சாவூர் மாவட்டம், என்றைக்குமே தி.மு.க-வின் கோட்டை. சென்று முறை எட்டுத் தொகுதிகளில் ஏழு வெற்றி பெற்றோம். ஒரே ஒரு தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இந்த முறை அதற்கான வேலையை நம் தலைவர் பார்த்துச் செய்துவிட்டார். எந்தத் தொகுதி என்று உங்களுக்குத் தெரியும். அதனால் இந்த முறை எட்டுக்கு எட்டு வெற்றிபெறுவோம். தஞ்சாவூர் மாவட்டம், 100 சதவிகித வெற்றி என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம்.

இந்த ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கொடுத்த மாவட்டம், இந்தத் தஞ்சாவூர் மாவட்டம். கலைஞரின் காலடி படாத இடம் கிடையாது என்பது இந்தத் தஞ்சாவூர் மாவட்டத்தின் பெருமை.

### மாதம் ஒரு முறை தஞ்சாவூர்

1962-இல் கலைஞர் அவர்கள் வெற்றி பெற்ற மண் இந்த தஞ்சாவூர் மண். அதே மாதிரி கலைஞர் அவர்கள் எப்போதுமே நான் டெல்டாகாரன் என்பதைப் பெருமையாகச் சொல்வார். அதே மாதிரி நம் தலைவரும் பெருமையாகச் சொல்வார், நானும் ஒரு டெல்டாகாரன் என்பார். நான் இன்று பெருமையாகச் சொல்லி அந்த உரிமையோடு வந்திருக்கிறேன், நானும் ஒரு டெல்டாகாரன்தான், நானும் உங்களில் ஒருவன்தான் என்ற உரிமையோடு உங்களிடம் இன்று வாக்குக் கேட்க வந்திருக்கிறேன்.

இந்த எழுச்சியைப் பார்க்கும்போது வெற்றி உறுதி என்று தெரிகிறது. நான் உங்களிடம் கேட்பதெல்லாம், சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்களை நீங்கள் கிட்டத்தட்ட 54,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்திருக்கிறீர்கள். இந்த முறை இன்னும் கொஞ்சம் கூடுதலாக 60,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும். நீங்கள் மட்டும் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்களை வெற்றி பெற வைத்துவிட்டீர்கள் என்றால், நான் சத்தியமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், மாதத்துக்கு ஒரு முறை தஞ்சாவூருக்கு வந்து உங்கள் அத்தனை பேரையும் நான் பார்த்துவிட்டுப் போவேன்.

அண்ணன் துரை சந்திரசேகரன் அவர்களை உங்களிடம் நான் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே கிடையாது. உங்கள் ஒவ்வொருவர் முகம் மட்டும் இல்லை, ஒவ்வொருவர் பெயரும் அவருக்குத் தெரியும். அந்த அளவுக்கு உங்களோடு இருக்கக்கூடியவர், மக்களோடு மக்களாக இருக்கக்கூடியவர் அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்கள்.

நான் சொன்னது மாதிரி ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துவிடுங்கள். நான் தலைவரிடம் பேசி அவரை அமைச்சராக்குகிறேன். அவர் என்னை அமைச்சராக்குவதற்கு அவர் பரிந்துரை செய்ய வேண்டும்.

### எல்லாருக்கும் முக்கியமான வெற்றி

நானும் ஒரு வேட்பாளர். நானும் இந்தத் தேர்தலில் போட்டி போடுகிறேன். நானே அடிக்கடி அதை மறந்துவிடுகிறேன். என் தொகுதி சென்னையில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி. இரண்டாவது முறை தலைவர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். என் தொகுதிக்கே நான் ஒரே ஒரு நாள்தான் வாக்கு கேட்டு சென்றேன். என் தொகுதியை விட்டுவிட்டு இன்று திருவையாறு தொகுதிக்கு வந்து அண்ணன் துரை.சந்திரசேகரனுக்கு வாக்குக் கேட்கிறேன் என்றால், என் வெற்றியைவிட அண்ணன் துரை. சந்திரசேகரனின் வெற்றி நம் எல்லாருக்கும் முக்கியமான வெற்றி.

இதுவரைக்கும் ஐந்து முறை உங்களின் அன்பைப் பெற்று, வாக்குகளைப் பெற்று, அவர் சட்டமன்ற உறுப்பினர் ஆகிவிட்டார். இந்த முறை சிக்ஸர் அடிக்க வேண்டும். திருவையாறு சட்டமன்றத் தொகுதி இந்த முறை சிக்ஸர் அடித்து ஆறாவது முறையாக அண்ணன் அவர்களை வெற்றிபெற வைக்க வேண்டும். இந்தப் பகுதிக்கு இவ்வளவு தைரியமாக வந்து உரிமையோடு நீங்களும் ஐந்து முறை வெற்றி பெற வைத்திருக்கிறீர்கள்.

இந்த ஐந்து வருடத்தில் என்னென்ன திட்டங்களை அண்ணன் சந்திரசேகரன் அவர்கள் இந்தத் தொகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறார் என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டை, உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திருவையாறு திட்டங்கள்

பூதலூர், திருவையாறு ஒன்றியத்தில் 220 குடியிருப்பு பகுதிகளில், 234 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வந்தது உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் சந்திரசேகரன் அவர்கள்.

அரசூர், மணக்கரம்பை, காட்டுக் கோட்டை, கண்டியூர், கீழத் திருப்பூந்துருத்தி, கல்யாணபுரம், பெரும்புலியூர், திருவையாறு, வில்லங்குடி ஆகிய ஊர்களில் 192 கோடி ரூபாய் செலவில் புதிய புறவழிச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

திருக்காட்டுப்பள்ளியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு இன்று 53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் புதிய புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

வெண்ணாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கின்ற பணிகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைக் கொண்டு வந்தது அண்ணன் துரை சந்திரசேகரன் அவர்கள்.

செங்கிப்பட்டியில் 300 ஏக்கரில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிப்காட் அமைக்கப்பட உள்ளது.

பூதலூர் ஒன்றியம் பூதக்குடி ஊராட்சியில் புதிய கால்நடைத் தீவனத் தொழிற்சாலை கொண்டு வந்திருக்கிறார் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

திருவையாறு பேரூராட்சி இன்று நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென் பெரம்பூர் பாலம் அமைக்கின்ற பணிகள், திருக்காட்டுப்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 25 கோடி ரூபாய் நிதியில் நிரந்தரக் கட்டடம் கட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில், 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லணை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது.

3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவையாறில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணி; திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் நேதாஜி மார்க்கெட்; 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திட்டை ஊராட்சியில் ரயில்வே மேம்பாலம் அமைக்கின்ற பணிகள் என இப்படி எத்தனையோ பணிகளை இந்தத் திருவையாறு தொகுதிக்கு அண்ணன் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

### புதிய கோரிக்கைகள்

இவை தவிர ஒரு பெரிய பட்டியலே கொடுத்துவிட்டார், கோரிக்கை. அவர் சொல்லிவிட்டார், மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சர் ஆகப்போகிறார், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப்போவது உறுதி. கோரிக்கைகள் எல்லாம் கொடுத்திருக்கிறேன், இந்தக் கோரிக்கைகள் எல்லாம் செய்துகொடுக்க வேண்டும் என்று அவர் சொல்லிவிட்டார்.

நான் கடந்த ஒரு வாரமாக மக்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியாகச் செல்ல தலைவர் என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். உதயநிதி வந்தார், வந்து பேசினார், திட்டங்களைப் பற்றிச் சொன்னார், அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டார், சென்றுவிட்டார். நாமும் கலைந்து போகலாம் என்று போய்விடக்கூடாது.

23-ஆம் தேதி தேர்தல். இன்னும் தேர்தலுக்கு 17 நாட்கள் இருக்கின்றன. நம் கைகளில் 17 நாட்கள் இருக்கின்றன. இந்த 17 நாட்களும் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடாக சென்று ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்து வாக்கு கேட்க வேண்டும். நம் திட்டங்களைச் சொல்ல வேண்டும். கடந்த ஐந்து வருடத்தில் நம் முதலமைச்சர் என்னென்ன திட்டங்கள் கொடுத்திருக்கிறார் என்பதை மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

### கட்டணமில்லாப் பேருந்து திட்டம்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் சொன்ன வாக்குறுதி, ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே நம் தலைவர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம், மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து திட்டம். இன்று ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் சேமித்திருக்கிறார்கள்.

எல்லாரும் படிக்க வேண்டும், எல்லாரும் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்க வேண்டும் என்று, குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் பசியோடு இருக்கக் கூடாது என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை நம் தலைவர் அறிமுகப்படுத்தினார். இன்று ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால், முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வியைக் கொடுத்திருக்கிறோம்.

கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் திட்டம் வாயிலாக கல்வி ஊக்கத்தொகைத் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்து படித்தாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். 13 லட்சம் மாணவ மாணவிகள் இந்தத் திட்டத்தில் பயன் பெற்றிருக்கிறார்கள்.

### ஒரே மாதத்தில் கொடுத்தார்

இரண்டு மாதத்துக்கு முன்பு நம் முதலமைச்சர் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறோம். அ.தி.மு.க ஆட்சியில் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள், 2019-இல் நிறுத்திவிட்டார்கள். ஆனால் நம் முதலமைச்சர் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் கொடுப்பதை விடக் கல்லூரி மாணவ மாணவிகளுக்குக் கொடுத்தால் மடிக்கணினி பயனுள்ளதாக இருக்கும் என்று முடிவு செய்து இன்று 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி கொடுத்திருக்கிறோம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கடந்த மூன்று வருடமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் வங்கி கணக்கில் செலுத்தி வருகிறார். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க, பா.ஜ.க. கூட்டணி முயற்சி செய்தது. தேர்தலைக் காரணங்காட்டி நிறுத்திவிடலாம், ‘மூன்று மாதத்துக்கு நிறுத்துவோம்’ என்று முயற்சி எடுத்தார்கள்.

நம் தலைவர் என்ன செய்தார், அந்தச் சூழ்ச்சியையெல்லாம் முறியடிக்கிற மாதிரி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் என மூன்று மாதத்துக்கும் சேர்த்து 3,000 ரூபாயுடன், கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என மொத்தம் 5,000 ரூபாயை ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஒரே தவணையில் நம் தலைவர் கொடுத்தார்.

### 2,000 ரூபாய் கொடுப்போம்

நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து உயர்த்தி 2,000 ரூபாய் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு எட்டாம் வகுப்பு வரை காலை உணவுத் திட்டம் வழங்கப்படும். முதியோர் உதவித்தொகை 1,200-லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500-ஆக உயர்த்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எந்தவித பிணையுமில்லாமல் 5 லட்சம் ரூபாய் வரைக்கும் கடன் வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அதே மாதிரி அடுத்த ஐந்து வருடத்தில் 10 லட்சம் ‘கலைஞர் கனவு இல்லம்’ கட்டப்பட்டு, யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அனைவருக்கும் ‘கலைஞர் கனவு இல்லத் திட்டம்’ மூலம் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### ரூ.8,000 மதிப்புள்ள கூப்பன்

இன்னொரு முக்கியமான வாக்குறுதி உங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ஆட்சி அமைந்த உடனே நம் தலைவர் முதலமைச்சர் ஒவ்வொரு மகளிருக்கும் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவோம். அந்த கூப்பனை வைத்து வீட்டுக்கு என்ன தேவையோ, மகளிர் நீங்களே உங்கள் வீட்டுக்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவையோ அதை நீங்களே முடிவு செய்து நீங்களே வாங்கிக்கொள்ளலாம். இந்தத் திட்டங்கள் எல்லாம் நடைபெற வேண்டும் என்றால், வருகிற சட்டமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

இவ்வளவு திட்டங்கள் செய்ததனால்தான் இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலம். வளருகின்ற மாநிலங்களில் முதல் இடத்தைப் பிடித்திருக்கிறோம். 11.19 சதவிகித வளர்ச்சியோடு இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலம்.

நாம் இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம். இது எதற்காவது ஒன்றிய பா.ஜ.க அரசு நமக்குத் துணையாக நின்றிருக்கிறதா? நமக்கு ஏதாவது திட்டங்கள் கொடுக்கிறார்களா? நமக்கு வரவேண்டிய நிதிப் பகிர்வு வரவில்லை.

### அனுபவம் எனக்குக் கிடையாது

நம் தலைவர் அடிக்கடி சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் ‘தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?’ என்ற தேர்தல். இதில் தமிழ்நாடு அணி நாம் மீண்டும் வெற்றிப்பெற்றுக் காட்ட வேண்டும், டெல்லி அணியை வீழ்த்திக் காட்ட வேண்டும். யார் டெல்லி அணி? மோடி, அவர் கூட யார்? அவரின் நம்பர் ஒன் அடிமை எடப்பாடி பழனிசாமி.

என் மீது அவருக்கு ஒரு பயங்கர பாசம். என்னைப் பற்றியே நினைப்பு.

**கூட்டத்தினர் – ``ஜாடிக்கு ஏத்த மூடி"**

**ஜாடிக்கு ஏற்ற மூடி மாதிரி இன்று மோடிக்கு ஏற்ற ஒரு அடிமைதான் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.**

**கூட்டத்தினர் – ``போட்டோ, போட்டோ காட்டுங்க".**

**``போட்டோ காட்டணுமா?"**

**உதயநிதிக்கு அனுபவமே இல்லை என்று அவர் சொல்கிறார். என் அரசியல் அனுபவம் அவருடைய வயது என்று சொல்லிவிட்டார். ஆம், நான் அவரை விடச் சிறிய பையன்தான். கண்டிப்பாக அவருக்கு இருக்கிற அனுபவம் எனக்குக் கிடையாது.**

**போட்டோ காட்டுகின்றார். தெரியுதா? யார் என்று ?**

**ஞாபகம் இருக்கிறதா? கொஞ்சம் ரீவைண்ட் செய்து பாருங்கள். தெரிகிறதா என்னவென்று. கீழே ஒருவர் படுத்திருக்கிறார்.**

**கரப்பான் பூச்சி, மண்புழு...**

**என்னைப்பற்றி பேசுகிறார்.**

**இந்த அனுபவம் எனக்கு இல்லை.**

பதவிக்காக யார் காலிலும் விழுகிற அனுபவம் எனக்குக் கிடையாது. எனக்கு இருக்கிற அனுபவம் எல்லாம் சுயமரியாதை அனுபவம்தான். கலைஞர் கற்றுக்கொடுத்த திராவிட இயக்கக் கொள்கை, சுயமரியாதைமட்டும்தான் எனக்குத் தெரிந்த அனுபவம்.

முதலில் ஜெயலலிதா அம்மா காலில் விழுந்து கிடந்தார். பிறகு அந்த அம்மா இறந்த பிறகு சசிகலா அம்மா காலைப் பிடித்தார். பிறகு இந்த அம்மா சிறைக்குப் போய்விட்டார்கள். பிறகு டி.டி.வி. தினகரன் காலில் விழுந்தார். அவரை விலக்கிவிட்டு, ஓ.பி.எஸ். அண்ணன் காலில் விழுந்தார். இப்போது அவர் நம்மிடம் வந்துவிட்டார், அவர் போன உடனே எல்லாரையும் விலக்கிவிட்டு, இப்போது என்ன செய்துவிட்டார்? நேரா டெல்லிக்குப் போய் மோடி காலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறார் இந்த எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

### நம்பர் ஒன் முரட்டு அடிமை

முரட்டு பக்தர்கள் பார்த்திருப்பீர்கள், முரட்டு தொண்டர்கள் கேள்விபட்டிருப்பீர்கள். எங்கேயாவது ஒரு முரட்டு அடிமையை பார்த்திருக்கிறீர்களா? இன்று இந்தியாவிலேயே நம்பர் ஒன் முரட்டு அடிமை எடப்பாடி பழனிசாமி அவர்கள் தான். மோடியின் முரட்டு அடிமை.

அந்த அடிமைக் கூட்டத்தை, டெல்லியிலிருந்து தமிழ்நாட்டை எப்படியாவது ரிமோட் கண்ட்ரோல் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த ரிமோட் கண்ட்ரோல்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள். நாம் மீண்டும், மீண்டும் சொல்வோம் தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்குக் அவுட் ஆஃப் கண்ட்ரோலாகத்தான் இருப்போம். இது சுயமரியாதை மண். அதற்கு இந்தத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை நாம் அடைய வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், உங்களில் ஒருவனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் அண்ணன் துரை சந்திரசேகரன் அவர்களுக்கு வாக்களித்து, மிகப்பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்கள் தொகுதிக்கு என்னென்ன தேவையோ நம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் செய்து கொடுப்பார் என்ற வாக்குறுதியை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

ஆதரிப்பீர் உதயசூரியன், உதயசூரியன். உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி! என்று தெரிவித்தார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கோவி.செழியன், கும்பகோணம் வேட்பாளர் அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம், மாநகரச் செயலாளர் தஞ்சாவூர் சட்டமன்ற வேட்பாளர் சண்.ராமநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் புண்ணியமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் இளவரசி கருப்பையா, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் உலகநாதன், சிவசங்கரன், கல்லணை செல்லக்கண்ணு, முருகானந்தம், கௌதமன், அரசபகரன், அசோக்குமார், நாகராஜன், ஜெயராமன், அகமது மைதீன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில்வேந்தன், துணை அமைப்பாளர்கள் சுரேஷ், கார்த்திக், ஹரிதரன், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடக் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழர் தேசம் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி, எஸ்.டி.பி.ஐ, முக்குலத்தோர் புலிப்படை, சமத்துவ மக்கள் கழகம், மக்கள் விடுதலைக் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.